பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5-கிளை குருகுலம், மாம்பாக்கம்; விசய, சித்திரை; 24—4—53 தளிர்-30

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## இல்வாழ்க்கையின் நோக்கம்

வாழ்க்கைத் துணைவியோடு கூடி அடக்கம் மேற்கொண்டிருந்து இல்லத்தில் தங்கி இல்வாழ்க்கை செய்வதில், எவ்வளவோ நன்மைகள் உண்டு. தமக்கு நன்மை உண்டாவது மட்டுமன்று, பிறர்க்கெல்லாம் வகையாக நன்மை செய்ய இல்வாழ்க்கையில் வழிகள் உண்டு; வலிவும் உண்டு. ஒவ்வொருவரும் நாட்டிற்குச் செய்ய வேண்டிய நற்கடமைகளை இல்வாழ்க்கையில் இருப்போரே நன்ருகச் செய்ய முடியும்.

மறைந்துபோன முன்னோர்களின் கொள்கைகளைப் போற்றுதல் தெய்வ உணர்ச்சியைப் பரவச்செய்தல், கடமைகளில் கருத்தாய் இருப்போர்க்கு இயன்ற வசதிகளைச் செய்தல், தன்னைச் சார்ந்திருப்போர்க்கு ஆதரவு காட்டுதல், அரசியல் நன்கு நடைபெற உதவுதல், தம் உடல் மன நலங்களைக் காத்துக்கொள்ளுதல் போன்ற கடமைகள் ஒவ்வொருவரும் கட்டாயமாகச் செய்யவேண்டியவை.

இவற்றுள், கடமைகளிற் கருத்தாய் இருப்போர்க்கு வசதிகள் இயன்றவரை செய்தல் என்பதை மேற்கொண்டிருப்போர்க்கு, மற்றவை எல்லாம் செய்வது இயல்பாகவே அமைகின்றது; ஆதலால், இது மிகவும் முக்கியமானது.

'கடமைகளில் கருத்தும் முயற்சியும் உடையோருக்கு வசதிகள் செய்தல் என்பதைத்தான் 'விருந்தோம்பல்' என்று பெரியோர் வழங்கி வந்தனர். இதை முதல் நோக்கமாக வைத்து யார் வாழ்க்கை நடத்துகின்ருர்களோ அவர்கள்தாம் இல் வாழ்வார் எனப்படுவர். இதன்பொருட்டே அந்த இல்வாழ்க்கையில் பொருள் தேடல் முதலிய செய்கைகளால் உண்டாகும் துன்பங்களையும் அவர்கள் அன்புடன் பொறுத்துக்கொள்வது வழக்கம். தனித்திருந்து இம் முக்கிய கடமையைச் செய்வதைவிடத் துணைவியோடும் சிறுவர் சிறுமியரோடும் சுற்றத்தோடும் இருந்து செய்தல் எளிது.

நாடெங்கும் இதனுல் எல்லாரும் கடமைகளில் கருத்துடையவராவர். நற்செய்கைகள் நிகழ்ந்து நலம் பெருகி வரும்.

இருந்தோம்பி இல்வாழ்வ
தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம்—தவம் இருந்து கடமை போற்றி இல்வாழ்க்கை செய்வதன் நோக்கமெல்லாம், விருந்து ஓம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு – நேர்கின்ற விருந்தினரைப் போற்றி உதவி செய்தற் பொருட்டாம்.

இருந்து என்றது, இல்லில் அடங்கி இருந்து என்னும் பொருட்டு; அங்கிலே தவத்தில் அடங்குவதால், அதற்குத் தவமிருந்து எனக் கூறப்பட்டது. வேறு நோக்கம் இல்லாமை தெருட்டும் பொருட்டு 'எல்லாம்' என்ருர்.

விருந்து, புதியராய் நேர்வோர். தத்தம் கடமைகளின்மேல் வெளி வந்தவர்க்கு இன்றியமையாத உண்டி உறையுள் முதலிய வசதிகளைச் செய்து உதவுதல் விருந்தோம்புதலாம். இதனுல் நாட்டில் கடமை உணர்ச்சிகளும் நற் செய்கைகளும் நிகழ்தலின், இல்வாழ்வார்க்கு இதுவே முதன்மையாயிற்று. விருந்தை ஓம்பி என்ருர், அவரை அருமையுடன் போற்றல்வேண்டும் என்றற்கு.

—:○●○:—

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**5-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(3-10-52 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| இலை | விசய, சித்திரை, | தளிர் |
|---|---|---|
| 5 | 24-4-53 வெள்ளி | 30 |


## விழித்தான் தமிழன்

"உலக மொழிகளுள் தலைமையானவற்றுள் தமிழும் ஒன்றெனினும், "பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும்" தமிழகத்தி லிருந்துகொண்டு, தமிழின் பெருமையைப் பிற நாடுகள் அறியாதபடி அதனை மறைத்து வருவது மிக இரங்கத்தக்க தொன்றும். ஆராய்ச்சியாளரோவெனின், ஓரிருவர் நீங்கலாகப் பிறரெல்லாம் பிற நாட்டுச் செய்திகளாயின் மறைந்த உண்மையை வெளிப்படுத்துவதும், தமிழ்நாட்டுச் செய்திகளாயின் வெளிப்பட்ட வுண்மையை மறைத்து வைப்பதுமே தொழிலாகக் கொண்டுள்ளனர். ஆயினும் கார்காலத்தில் மறைக்கப்பட்ட சூரியன் திடுமென ஒரு நாள் திகழ்ந்து தோன்றுவதுபோல் தமிழும் ஓர் நாள் உலகத்திற்கு வெளிப்படும் என்பதற்கு எட்டுணையும் ஐயமின்று".

மேலே கூறியுள்ளவை திருவாளர் தேவநேயன் B.O.L. அவர்கள் ஆக்கிய "திரவிடத் தாய்" என்னும் நூலின் முகவுரையில் கண்டுள்ளது. ஓய்வு நேரத்தில் நூல் நிலயத்தில் இந்த நூல் கிடைப்பின் யாவரும் வாங்கிப் படித்துப் பண்பாடு அடையலாம்.

தமிழ்மொழி எது? "பனி மலை (இமயம்) தோன்றாத முதற் காலத்தில் நாவலந் தேய (இந்தியா) முழுவதும், தொல்காப்பியர் காலத்தில் வேங்கடத்திற்கும் (தெற்கே அழிந்துபோன) குமரி மலைக்கும் இடையிலும் வழங்கிவந்து, தற்போது வேங்கடத்திற்கும் குமரி முனைக்கும் இடையில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் மைசூர்ச் சீமைக்குத் தெற்கிலும் வழங்கி வருவது தமிழ் மொழியாம்".

"ஆரியக் கலப்பினாலேயே மாபெருந் திராவிட நாடு சீர் குலைந்து சின்னா பின்னமாய்ச் சிதைந்து கிடக்கின்றதென்க".

"உலகிலேயே முதன் முதல் மனித இனம் தோன்றியது தமிழ்நாடு. இங்கிருந்துதான் மக்கள் மற்றப் பகுதிகளுக்குப் பிரிந்து பரவினர்".

இவை ஆராய்ச்சியாளரின் முடிவு. தமிழனுடைய நாகரிகம் பண்பட்டது. இன்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் பிறந்த தமிழன் உலகில் எங்குமில்லாத [illegible] தனி சிறந்த நாகரிக வாழ்வு வாழ்ந்தான். மக்கள் அலைகடலைக் கண்டு அஞ்சிய காலத்து மரக்கலம் விடுத்து மற்ற நாடுகளை வென்று ஆண்டு வந்தான். அவனுடைய மதம் சமுதாயம் வாழ்க்கை இவை இயற்கையின் அடிப்படையில் அமைந்திருந்தன. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற சிறந்த கொள்கை அவன் வாழ்வின் தாரக மந்திரமாயிருந்தது. வாழ்க்கையின் உயர்வு, உழைப்பின் அடிப்படையில் கட்டப்பட்டிருந்தது. அவன் வணங்கிய தெய்வம் இயற்கை. அறிவின் துணை கொண்டு வாழ்ந்தான். கடலின் அடியில் கவனிப்பாரற்றுக் கிடந்த முத்தும் மணியும் அவன் மடியில் தவழ்ந்தன. தென்னாட்டுச் சந்தனம் உரோமாபுரி ராணிகளின் உடலில் மணம் வீசியது. தமிழ் நாட்டு மயிலின் தோகை எகிப்தின் இளவரசிகளுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்தது. அவர்கள் வாழ்வில் வெட்டில்லை, குத்தில்லை. வேறுவே றிருந்து அருந்தும் கட்டில்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தனி சிறந்த நல்வாழ்வு வாழ்ந்தான் தமிழன். 'தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' என்று கருதி முயன்று வீறினான்.

இப்படிப் பெருவாழ்வு வாழ்ந்த தமிழனின் இன்றைய நிலை என்ன? நினைக்கின் நெஞ்சு கொதிக்கிறது. காரணம் கண்டு அதனைக் களைய ஏற்பட்டதுதான் தற்காலத் தமிழர் ஊக்கம்.

ஆரிய மதம் முன்பு நாட்டில் பரவியது. நாட்டிலே நால்வகைச் சாதிகள் தோன்றின. நான்காவது வகுப்பு 'சூத்திரர்கள்' என்பர். சூத்திரர் என்றால், மற்றச் சமுதாயம் முழுமைக்கும் சூத்திரர்களாய் அதாவது ஆதார

மாணவர்களாய் விளங்கினோர் என்பது பொருள். அந்தக் கருத்து இப்போது வழங்காமல் தவறான கருத்து வழங்குகிறது; மடமை வளர்ந்தது. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு என்றது போய், சந்தேகிக்காதே, சந்தேகித்தால் மீளா நரகில் வீழ்வாய் என்று மனிதனின் பகுத்தறிவுக்குத் தடையுத்தரவு போடப்பட்டது. போலிக் கொள்கைகள் நாட்டிலே நடமாடின. 'அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற் போய்ப் பெறுவதெவன்' என்ற மறை மறைந்தது, அறியாமை வளர்ந்தது; அறிவு புதைந்தது.

ஆனால் இப்போது, உலகம் வளர்கிறது; வளர்ந்து கொண்டே போகிறது. நாம் குழந்தையாயிருந்தபோது எப்படி இருந்தோம்? இப்போது வளர்ந்த காரணத்தால் தேவை அதிகப்படுகிறது. முன்னே தேவையாயிருந்தது இப்போது தேவைப்படாத ஒன்றாகிவிடுகிறது. நாம் உயர்ந்துகொண்டேயிருக்கிறோம். காலத்திற்கேற்பத் தமிழர் விழிப்படைந்து உயர்ந்து வருகின்றனர். மேலும் மேலும் உயர்க, உயர்க என வேண்டுவோம்.

—மு. ரா.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# திருவாசகத்தின் பெருமை

(புலவர் மயிலை. சிவ முத்து.)

(முன் தொடர்ச்சி)

சிறு குழந்தைகளும் படித்துணர்ந்து தம் அநுபவத்தோடு ஒத்திட்டுப் பார்த்து ஆனந்தமடையத் தூண்டுகின்றதன்றோ! இங்ஙனம் எளிய சொற்களால் மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளையே துணையாகக் கொண்டு அரிய பெரிய கருத்துக்களையும் எளிதாக உணர்த்தும் ஆற்றல் வள்ளுவர் போல் மணிவாசகரிடமும் அமைந்துள்ளமையை நூல் முழுதும் ஆழ்ந்து படிப்போர் நன்குணர்ந்து அநுபவிக்கலாம்.

திருவாசகத்தின் சிறப்புக்கும் கருத்துச் செறிவுக்கும், எளிமை, இனிமை, வாழ்க்கையோடு ஒட்டிய தன்மை ஆகியவைகட்கும் இவை எடுத்துக் காட்டுக்கள்; பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போல.

இத்தகைய அரிய பெரிய நூலை முறையாகப் பாடங் கேட்டுத்தான் உணர முடியும். பாடங் கேட்டல் மட்டும் போதாது. அறிவும் அநுபவமும் வாய்ந்த பேரறிஞர்கள், தாம் உணர்ந்த சிறந்த கருத்துக்களை விரிவுரையாகவும் செய்து உலகிற்கு உதவுதல் வேண்டும். இளவழகனார் போன்ற அறிஞர்கள் இம் முறையைக் கையாண்டு வருவது வரவேற்கத் தக்கதும் பாராட்டத் தக்கதுமாகும்.

எத்தனையோ சிறந்த நூல்கட்கெல்லாம் சீரிய உரை வகுத்துச் சென்ற நம் சான்றோர்கள் எக்காரணத்தாலோ தேவாரம், திருவாசகம் போன்ற சிறந்த நூல்கட்கு உரை வகுக்கவில்லை. பக்திப் பெருக்கால், இறைவன் திருவருட் சிறப்பால் பாடப் பட்ட அருட் பாடல்களுக்கு நாம் உரை வகுக்கும் ஆற்றல் இலோம் என்று அவர்கள் கருதியிருத்தலும் கூடும். அஃது உண்மையே எனினும், உலகத்தார் ஓரளவாவது இந்நூல்களின் பொருட் சிறப்பை உணர்ந்து கொள்ள அறிஞர்கள் தாம் உணர்ந்த பொருள்களை உரை வடிவால் எழுதி வெளியிடுதல் தவறாகாது. இத்தகைய சிறந்த நோக்கத்துடனேயே திருவாசகத்துக்கு ஒரு பெரிய விரிவுரை எழுதுதல் வேண்டும் என எண்ணினர் நம் தமிழ் நாட்டு ஞானக் களஞ்சியமாய் விளங்கிய ஆசிரியர் உயர்திரு. மறைமலை அடிகளார். அவ்வாறு எண்ணிய அப் பெருந்தகையாரால் ஆராய்ச்சி விரிவுரை எழுத நேர்ந்தது.

போதிய ஆதரவின்மையால் அடிகளாரின் கருத்து முழுதும் முற்றுப் பெறவில்லை. எனினும் 'மாணிக்க வாசகர் கால ஆராய்ச்சி, என்னும் ஓர் உயரிய பெரு நூலின் வழியாக நம் அடிகளார் தம் அரிய கருத்துக்களையெல்லாம் ஒரு வகையில் விரிவாகவே விளக்கிக் காட்டியுள்ளனர். அஃது ஒரு பெரிய நூலாக அமைந்து விட்டமையால் ஒரு சிலராலேயே அதனாலாகிய நன்மையைப் பெற முடிகின்றது. அந்த நூலும் அச்சில் இல்லாமையால் திருவாசகத்தின் சிறப்பினைப் பலரும் அறிந்து உணர்ந்து கொள்ளுதற்கு இயலாதவராகவே இருக்கின்றனர். இக் குறையினை அறிஞர்கள் முன் வந்து போக்கவேண்டும்.

# பணித் துறை

## * கருதிய கருமம் *

(நாராயணசாமி)

கருதிய கருமம் கடைபோவ தாயின், மாந்தர் வாழ்வு பல் சுவை நிரம்பியதாகவே காணப் படும்.

அக் கருதலினுள்ள இருவகை நிலைகளுள்ளும், உலகுக்கொத்த தும், வாழ்வை வளம்படுத்தக் கூடியதுமான நற்கருத்தையே கொள்ளல் வேண்டும் என்பதை நினைவு கூரவேண்டும். ஏனெனில், மனப்பான்மை திரிந்து பட்டு உலக நிலை மாறியுள்ள இக்காலத்தில், அநேகர் தாங் கருதும் கருமத்தைத் தீவழிக் கேதுவானதாகவே செய்து கொள்வர்.

இக்காரணம் பற்றியே கருதலி லுள்ள குற்ற நற்றங்களை ஆய்ந்து கொள்ளல், தனக்கு மட்டுமின்றிப் பிறருக்கும் நன்மையே உண் டாக்கும்.

இனி, தாங் கருதும் கருமங்கள் நல்வழியில் முடிவடைந்து தனக் குப் பெற்றியை அளிக்க இயலா மற் போவது ஏன்? இன்றைய உலகில் நினைப்பளவிலே காணக் கூடிய ஒரு முடிவு செயலளவுக்கு வரும்போது, அது பல்லாற்று னும் சிதைவுபட்டுச் செயல் முடி யுந் தருவாயில் எஞ்சிய சிறு பாகமே நிறைவேறும்.

இவைகளினால் மனங் குன்றி உற்சாக மிழந்து, உலக வாழ்க் கையில் வெறுப்புக்கொண்டு, உண்மை நிலையினின்று பிறழ்ந்து விடுகின்றனர் மாந்தர். அத்தகைய தொரு ஏற்றமில்லாச் சூழ்நி லையை ஏற்படுத்திக் கொண்ட மாந்தர், அச் சூழ்நிலையினாலேயே பாதிக்கப்பட்டவராய் உலகை யும் தன் தீவினைக்கும் அதற்கும் சம்பந்தமிலாத ஒரு பொருளை யும் வைதவராய் வறிதே காலத் தைக் கழிக்கின்றனர்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா".

மனித முயற்சியினால் அடை யக் கூடிய பலனொன்றை அடைய எண்ணி எண்ணியபடி காரிய சித்தி பெற இயற்ற முடியாம லும், இயற்றிய பலன் கிட்டா மலும் கிட்டிய பலன் தான் அனுபவிக்க இயலாமலும் போவது, இன்று உலகில் சர்வ சாதாரணம். எனவே, வாழ்க் கையைத் திறம்பட நடத்த இய லாமல், அதில் சுவையுமின்றிக் கட்டாயத்திற்காகவே வாழ்கின் றனர். பண்டைய தமிழ் மக்கள் வாழ்வில், ஓரளவுக்கேனும் சுவை நிரம்பியிருக்கப் பெருங் காரணம், அவர்களின் மன உறுதியே.

நம்பிக்கை கொண்ட மக்கள் அந் நம்பிக்கை அவ நம்பிக்கை யாகப் போகாதவாறும், எண்ணிய எண்ணியபடி முடிக்கும் திண்ணிய மனப்பண்பும் பெற்றிருந்தனர். தாங் கருதும் கருமங்கள் சிறந்த முறையில் வெற்றி பெற முக்கியமாக இரண்டு தேவை. முதலாவது மனப்பண்பு, இரண்டாவது சாதகமான சூழ்நிலை.

காரண காரிய சம்பந்தமில் லாததும், வீண் தொல்லைகள்

---

முதுபெரும் புலவர், பண்டித மணி கதிரேசச் செட்டியார் அவர்கள் திருவாசகத்துக்குச் சிறிது சிறிதாக விரிவுரை எழுதி வெளியிட்டு வருகின்றார்கள். மற்ற அருட் பாடல்களுக்கும் விரிவுரைகள் வரவேண்டும்.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்




யூனைடெட் கன்ஸர்ன்,
54; பந்தர்த் தெரு, :: சென்னை-1

கொடுத்துக்கொண் டிருக்கும் அநேக பழக்கங்களும், இன்றைய சமுதாயச் சட்டங்களும், வாழ்வைப் பாதிக்கக்கூடியன. அவ்வவ்விடத்தின் இயற்கை நிலைக்கேற்ப மாறுபடும் மனித வாழ்க்கையின் மாற்றங்களை நன்கறிய வேண்டும். அன்றுமுதல் தொடர்ந்து வரும் கேடான வாழ்க்கை முறையின் சில அம்சங்கள்போல் இன்றெழும் அரசியல் கேட்டினால் பெரும்பாலானோர் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

பெரும்பாலானோர் கருத்துப்படி புரட்சி யுலகை உண்டாக்கா முன்னம், தத்தம் நிலையே உயர்வு என மதித்து, அவற்றிலேயே இன்பம், புகழ், கலையுணர்ச்சி யாவற்றையும் பெற்று வாழ்ந்த அக்கால மாந்தர், இன்று இத்தகைய தொரு உலகைக் கண்டபின்னும் அமைதியான ஓர் இன்ப வாழ்வைப் பெற்றார்களில்லை. அன்று மனிதன் மிருகமாக வாழ்ந்தானென்னும் கொள்கைப்படி பார்த்தாலும், அம் மிருகத் தன்மையிலே என்றும் உலகத்துக்கு வேண்டிய சில பண்புகளையும் பெற்றிருந்தான்.

உண்மை உலக முன்னேற்றம் கல்வி அறிவினால் மட்டும் கிட்டவில்லை. நிறைந்த கல்வியறிவு பெற்றோரும் திகைக்கும்படியான செயலை, அக் கல்வியறிவில்லா ஒருவனும் செய்து காட்டலாம். கல்வி தங்களைத் தாங்களே, உணரச் செய்ய வல்லதாக இருக்கவேண்டும். ஒவ்வோர் அம்சமும் மனப் பண்புகளை விருத்தி செய்ய வல்லதாகவே இருக்கவேண்டும்.

ஒரு சிலரின் அறிவியல் விளைவால் உலக முன்னேற்றம் ஏற்படவில்லை. உள்ளத்தை அனை

.................................................

வரும் அனுபவிக்கும் ஒரு சமரசமான உலகை ஏற்படுத்தினாலொழிய முன்னேற்றம் அடைந்ததாகக் கூறப்படுவதற்கில்லை.

அறிவியல் கலையினால் வாழ்க்கைச் சாதனங்களைப் பெருக்கலாமே யொழிய, வாழ்க்கையை உயர்த்த மனப் பண்புகளே அவசியம். எவ்வளவுக் கெவ்வளவு வாழ்க்கைச் சாதனங்கள் பெருகுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு மனப்பண்புகளும் சிறந்த முறையில் மேம்பாடடைய வேண்டும்.

யாவரும் சிறந்த மனப்பண்புகள் பெற்றிருப்பாரே யாகில், ஒருவர் எண்ணும் எண்ணங்கள் காலத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப அமைந்து வெற்றியை அளிக்கும் என்பது நிச்சயம்.

# குருகுலச் செய்தி

## குருகுலக் குரல்

மந்திர ஒலியும் செந்தழல் ஒளியும் உடைய அந்தணர் இருக்கைகளும், ஏனை அறவோர் துறவோராகிய நல்லோர் இருக்கைகளும் ஊர்கள் தோறும் இருத்தல், நாட்டின் நலத்துக்கு நல்லது. இற்றைக்கு ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் நமது நாட்டில் விளங்கியிருந்த கோவலனும் கண்ணகியும் தாம் பிறந்த ஊராகிய காவிரிப்பூம் பட்டினத்தை நீங்கி மதுரைக்குச் சென்றபோது, இடையில் இத்தகைய மங்கல மறையோர் இருக்கைகளும் பிறவுங் கண்டு சென்றனர் என்று அவர் வரலாறு கூறும் சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகின்றது. அம் மறையோர் அழலோம்பும் ஓம கூடம் தன் நாட்டு அரசனுக்கு வெற்றியையும், மேகத்துக்கு மழை பெய்யும் நீர்க் கருவையும் உண்டாக்குகின்ற தென்றும், அடிக்கடி அவர் அழலோம்பி ஆவுதி நறும்புகை எழுப்புவதனால் அப் புகை சூழ்ந்த அவர் இருக்கைகள் மேகம் சூழ்ந்த மலைகளைப் போலத் தோன்றும் என்றும் அச் சிலப்பதிகாரம் விளக்கமுங் கூறுகின்றது.

"உழைப்புலிக் கொடித்தேர்
உரவோன் கொற்றமொடு
மழைக்கரு உயிர்க்கும்
அழல்திகழ் அட்டில்
மறையோர் ஆக்கிய
ஆவுதி நறும்புகை
இறையுயர் மாடம்
எங்கணும் போர்த்து
ஞ்சுசூழ் மலையின்
மாணத் தோன்றும்
மங்கல மறையோர்
இருக்கை"

என்பவை அந்நூலில் வரும் வரிகள். மங்கல மறையோர் இருக்கையேயன்றி ஏனைத் தவ முனிவர் முதலியோர் இருப்பிடங்களும் அந்நாளில் அங்கங்கும் விளங்கியிருந்தன என்பது மணிமேகலை வரலாறு கூறும் நூலில் அவள் வஞ்சிமாநகர்க்குச் சென்றாள் என்னுமிடத்தில்,

"தேவ குலமும்
 தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும்
 பொய்கையும் மிடைந்து
நற்றவ முனிவரும்
 கற்றடங் கினரும்
நன்னெறி காணிய
 தொன்னூற் புலவரும்
எங்கணும் விளங்கிய
 எயிற்புற இருக்கை"

என்று விளக்கப்படுகின்றது.

அறவோரும் அந்தணரும் துறவோருமாகிய இச் சான்றோர் விளங்கிய ஊர்களெல்லாம் செழுமையும் நல்வாழ்க்கையும் நீண்ட ஆயுளும் அமைதியும் மெல்லுணர்வும் வாய்ந்திருந்தன என்பதற்கும் நம் முன்னோர் நூல்களில் நிறையக் குறிப்புகள் இருக்கின்றன. தாம் நரை திரையில்லாமல் நீண்ட நல்வாழ்க்கையும் அமைதியும் பெற்றிருந்ததற்குப் பிசிராந்தையார் என்னும் சங்ககாலப் பெரியார், தமதூரில் சான்றோர் பலர் இருந்தமை என்று காரணம் கூறுகின்றார்.

"யாண்டு பல ஆயினும்
 நரையில வாகுதல்
யாங்கா கியர்என
 வினவுதி ராயின்
..................................
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
 சான்றோர் பலர்யான்
வாழும் ஊரே"

அதனால், மக்களும் அரசனும் நன்னெறியில் நிற்க நேர்கின்றதென்னும் நுண் பொருளும் விளங்குகின்றது.

ஆகவே ஒரு நாடு சிறந்து விளங்கி அருட் செல்வமும் பொருட் செல்வமும் நிறைந்து திகழ்தற்கு அந்நாட்டில் விளங்கும் சான்றோர் பெருமக்களின் நன்னெறியே காரணம் என்பது சற்றும் ஐயுறவின்றித் தெளியப்படும்.

திருமூலர் இக் கருத்தைப் பிழிந்தெடுத்து,

"அந்தண்மை பூண்ட
 அறவேள் ஆகமத்துச்
சிந்தைசெய் அந்தணர்
 சேரும் செழும்புவி
நந்துதல் இல்லை
 நரபதி நன்றாகும்
அந்தியும் சந்தியும்
 ஆகுதி பண்ணுமே"

என்று தீர்மானமாகக் கூறுகின்றார்.

எனவே, நாட்டின் சீர்திருத்தத்தை விரும்புவோர், முதலில் அற நெறி பரப்பும் சான்றோர் பக்கலில் கருத்தைத் திருப்புதல் இன்றியமையாததாகும்; நாட்டில் அவர் அற நெறி பெருகுதற்கு ஆவனவெல்லாம் செய்தல் வேண்டும்; தாமும் அவரைப் பின்பற்றி அவர் போல உயர்ந்து நாட்டுக்கு உணர்வாற்றலால் நலம் விளைத்தற்கு முந்துதல் வேண்டும். இந்தத் திருப்பணி உள்ளன்போடும் உறுதியோடும் சோர்வின்றி எல்லாராலும். எங்கும் நடைபெறுதல் வேண்டும்.

சான்றோர் தம் நுண்ணுணர்வுகளை, உயர்ந்த பரந்த தூய அருஞ் செயல்களை, எங்கும், தம் வாழ்க்கைப் பழக்கங்களாலும் மந்திர ஒலிகளாலும் செந்தழல் ஒளிகளாலும் அருள்சிறந்த உள்ளொளிச் சூழலாலும் இடையறாத நல்ல பெருந் தொண்டுகளாலும் வளமாக, தூய்மையாக, இனிமையாக, இயல்பாக, பயனுண்டாக என்ஞான்றும் நாடு முழுதும் இயக்கிக்கொண் டிருத்தல் முதன்மையானது.

அதற்காக அச் சான்றோர்க்கு அமைதி வேண்டும். தக்க தூய இருப்பிடங்கள் வேண்டும்; தேவைக்குரிய எளிய சிலச்சில பொருள்கள் காலந்தோறும் வேண்டும். தம் அறச்செயல்கள் இடையூறின்றி நடைபெறுதற்கு நாட்டில் நன்மதிப்புமளவு காவலும் வேண்டும்.

முற்றிய துறவோரா யிருந்தால், அவர்க்கு ஒரோவொருகால் இவற்றிற் குறைவுகள் நேர்ந்தாலும் தம் இயற்கை வல்லமையை அதன் ஆற்றல் குன்றாமல் நன்கு இயக்கிக் கொள்ள முடியும்.

அறவோர், அந்தணர், கற்புடை மகளிர் முதலிய ஏனைச் சான்றோர்க்குச் சூழலுங் காவலும் பிறவும் நன்றாயிருக்க வேண்டும்.

அதற்குக் குடிமக்களும் அரசியலும் சான்றோர் திறத்தில் மிக்க இணக்கமும் விழிப்பும் மேற்கொண்டிருத்தல் இன்றியமையாதது. அரசன் எவ்வழி அவ்வழி குடிகளாதலின் அரசியலே முதல் இத்துறையில் ஊக்கங் காட்டுதல் வேண்டும். "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்" (55: 3) என்பார் திருவள்ளுவர். "மாதவர் நோன்பும்மடவார் கற்பும் காவலன் காவல் இன்றெனின் இன்று" என்றது மணிமேகலை.

ஆகவே, சான்றோரைத் தன் நாடுமுழுதும் அங்கங்கும்இருத்தி அவாது உணர்வியக்கம் நன்றாக நிகழச் செய்தல் அரசனுக்கு முதற் கடமையாகும். அதனால் அற நெறி எங்கும் பரவியோங்கி இறைவன் அருளையும் அதனால் இயற்கை மழையையும் தன் நாட்டுக்கு வருவித்தலும், குடிமக்களை எளிதில் அறத்தின் வழி ஒழுகச் செய்தலும் கூடுகின்றன.

பண்டைக் காலத்தில் சான்றோரைக் காத்து நாட்டுக்கு உணர்வும் நலமும் பெருக்குந் திருப்பணி நன்கு நடைபெற்று வந்தது. முடிமன்னருங் குறு

நில மன்னரும் இக் கடமையைக் கண்ணெனப் போற்றி வந்தனர். மக்களும் இந் நலத்துக்கு ஆக்கமாய்த் திகழ்ந்தனர். சங்க காலத்தில் விளங்கிய கபிலர், கோவூர் கிழார், ஔவையார், பிசிராந்தையார், பெருஞ் சித்திரனார், வெள்ளைக்குடி நாகனார், மோசி கீரனர் முதலிய எண்ணிறந்த சான்றோர்களை அக்காலத்தவர் சிறப்பாகப் போற்றிக் காத்துப் பயன்கொண்ட செய்திகள் புறநானூறு முதலிய பழந் தமிழ் நூல்களில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

கபிலர் என்னும் அந்தணர்க்குத் தமிழகமெங்கும் சிறப்பு மிகுந்திருந்தது; ஊர்களும் பொருள்களும் அவர்க்கு ஏராளமாக வழங்கித் தமிழகம் புகழ் பெற்றது; பாரி என்னும் பெருவள்ளல் அவர்க்கு மிகவும் இணக்கமாய் இருந்து விளங்கினன். தெய்வ நலமிக்க துறவோராகிய ஔவையாரை அதிகமானும் பிறரும் மிக்க நம்பிக்கையோடும் மதிப்போடும் அன்போடும் போற்றிக் காத்து வந்தனர். கோவூர் கிழார் என்னும் அறவோரைச் சோழர் பரம்பரையினர் தக்கவாறு போற்றி நலமுற்றுப் புகழோங்கினர். இங்ஙனம் சங்க நூல்களில் நெடுக இதுபற்றிக் குறிப்புகள் உண்டு.

பிற்காலத்திலும் பராந்தகச் சோழன், பராக்கிரம பாண்டியன் போன்றோர் இவ்வாறே சான்றோர் இருக்கைகள் நிறுவி அங்கங்கும் நல்லுணர்வும் வளமும் பெருக்கிவந்தனர்.

கரிகால் வளவன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன், சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப் பெருஞ் சேரலிரும்பொறை முதலிய எத்தனையோ பேர் சான்றோராய் உயர்ந்து திகழ்ந்தனர்.

ஆகவே, தமிழ் அரசு தக்க அடிப்படையுண்மை கண்டு அதன்வழியே ஒழுகி நாட்டுக்கு மெய்வளம் பெருக்குவதாயிற்றென்பது இனிது விளங்கும். அரசினர்க்குரிய இப் பொறுப்பை,

"நாடுகெழு செல்வத்துப்
பீடுகெழு வேந்தே!
நினவ கூறுவல்,
எனவ கேண்மதி
அறம்புரிந் தன்ன
செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதில்
பதன்எளியோர் ஈண்டு
உறைவேண்டு பொழுதில்
பெயல் பெற்றோரே
.................................................
மாரி பொய்ப்பினும்
வாரி குன்றினும்
இயற்கை யல்லன
செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக்
கண்ணகல் ஞாலம்"

(புறநானூறு, 35)

என்று பண்டைத் தமிழ்ச் செய்யுள் ஒன்று இனிதுணர்த்துகின்றது.

மழை வளம் அறவுணர்வால் உண்டாவ தென்பதும், அறவுணர்வு அறவோர் முதலிய சான்றோரால் எங்கும் பெருக்கப்படுவதென்பதும், எனவே அரசாட்சியாவது நாடு முழுதும் சான்றோரைப் போற்றி அதனால் அறநெறி பரப்பிச் செயல் புரியும் முதன்மையுடைய தென்பதும், இந் நிலையிலேதான் குடி மக்கள் பொருள் வளமும் அருட் செழிப்பும் ஒருங்குடையராய்த் தாமும் அறம் இயற்றி ஓங்குவரென்பதும் இதுகாறுங் கூறியது கொண்டு தெளிந்துகொள்ளப்படும்.

சான்றோரும் அரசரும் குடிமக்களும் இக் கருத்தில் இவ்வாறு ஒத்த நோக்கமும் இணக்கமும் இயக்கமும் உடையோராய் அறம் பெருக்கி வருதலைவிட நிலையான நாட்டு வளர்ச்சியும், எதிர்கால ஆக்கப் பணியும் வேறில்லை. அனைவோர் உடல் பொருள் ஆவி முழுதும் இவ்வறம் பெருக்கும் நிகழ்ச்சிக்கே ஒத்துச் செலவாதல் வேண்டும். "நல்லார் இணக்கமும் நின் பூசை நேசமும் ஞானமுமே யல்லாது வேறு நிலையுளதோ" என்றார் சிறந்த அருட்பெருஞ் சிறப்பினரான பட்டினத்தடிகள்.

ஆர்க்கும் இடுமின்,
அவரிவர் என்னன்மின்;
பார்த்திருந் துண்மின்,
பழம் பொருள் போற்றன்மின்;
வேட்கை யுடையீர்
விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந் துண்ணுங்
காலம் அறிமினே.

ஒழிந்தன காலங்கள்,
ஊழியும் போயின;
கழிந்தன கற்பனை
நாளுங் குறுகி;
பிழிந்தன போலத்தம்
பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும்,
அறம்அறி யாரே.

சான்றோர் பணி:

நாட்டு வளத்துக்கும், நன் மக்கள் அறநெறிக்கும், அந் நாட்டின் செங்கோலாட்சிக்கும் தம் உணர்வும் ஒழுக்கமும் காரணமாயிருத்தல் அறிந்து, சான்றோரும், இயன்றவரை தம் கடமைகளில் வழுவாமல் விழிப்பாய் விளங்குவர். தமிழ் நாட்டிற் பண்டு விளங்கிய சங்க காலச் சான்றோர், இக் கடமையிற் கண்ணுங் கருத்துமாயிருந்து நடந்து கொண்டனர். அவரால் தமிழ் நாடு முழுதும் அக் காலத்தில் அறநெறியிற் சிறந்து ஓங்கியது. குடிமக்களும் அரசரும் நெறி தவறுங் காலங்களில் அச் சான்றோர் அஞ்சாது அறிவுரைத்து எங்கும் அறநெறி பரப்பிவந்த அருமை ஒருபோதும் மறப்பரிது. சான்றோரில்லாத ஊரை ஊரென்றே எண்ணார் அக் காலத்தவர்; சான்றோரிருக்கும் ஊரே பாது காப்பானது, நடுக்கமில்லாதது, ஒடுங்காதது என்றெல்லாம் அவர் கருதி மகிழ்ந்தனர்.

''பொதியி லாயினும், இமய மாயினும்,
..................புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலேஇய என்ப தல்லதை
ஒடுக்கங்கூறார் உயர்ந்தோர்
உண்மையின்''

என்னும் இளங்கோவடிகள் திருமொழியே இதற்குப் போதிய சான்றாகும்.

கடவுள் துணை:

இனி இவ்வாறு அனைவர் நலத்துக்குங் காரணமாகிய சான்றோர் தமது சான்றாண்மையுணர்வை எவ்வாறு பெறுகின்றனர் என்பதும் அறிதல்வேண்டும். தம்மினும் பெரியாரது துணை கொண்டுதான் எவரும் மேன்மையுறுதல் கூடுமாகலின், சான்றோர் தாம் உணர்வு பெறுதற்கும் அம் முறையையே கடைப்பிடித்தல் வேண்டுமென்பது தீர்மானமாக முடிக்கப்படும். அவ்வாறே பெரியோர் பெரியோரென்று ஒருவரையொருவர் தாவித் தாவித் துணை பெறுதலே இவ்வுலகத்தின் இயல்பு. இங்ஙனந் தாவித் தாவிச் செல்வோர்க்கு இயற்கையில் ஒரு முடிவு இருத்தல்வேண்டுமன்றோ? அம் முடிவிடமே, தனக்குமேற் பெரிய தொன்றில்லாத, தானே எனையெல்லார்க்கும் உணர்வு பயக்கும் பெரிய பொருளாகத் திகழ்கின்ற 'கடவுள்' என்பது. அப் பெரும் பொருள், இயல்பாகவே உண்மை அறிவு இன்ப வடிவானது.

அதன் துணைகொண்டே சான்றோர் தமது சான்றாண்மையுணர்வை முடிவாகப் பெருக்கிக் கொள்வர்; பெருக்கி, எனையெல்லார்க்கும் நாடு செழிக்க உதவுவர். நாட்டு முன்னேற்றத்திற்கு இந் நெறியை அல்லது வேறு வாயிலே இல்லையென்பது தக்கோர் முடிபு. அல்லும் பகலும் நாட்டுக்கு இங்ஙனந் தோன்றாத் துணையாயிருந்து ஆக்கந் தேட உதவும் முதல்வனை, இல்லையென்று வாதித்து நிலை கெடுவது நல்லதாகாது.

வல்லவன் வன்னிக்கு
இறை இடை வாரணம்
நில்லென நிற்பித்த
நீதியுள் ஈசனை,
இல் என வேண்டா;
இறையவர் தம்முதல்
அல்லும் பகலும்
அருளுகின்றானே.

நடுநாட்டு யாத்திரை

மலர்

குருகுலத் தலைவர், சென்ற இரண்டு கிழமைகளாகத், தேவாரப் பாடல் பெற்ற நடுநாட்டுத் தலங்களிற் சென்று திருவருளை வழிபட்டு வந்தார்கள்.

குருகுலத்தைச் சேர்ந்த மாணவர் அன்பர் நூற்றுவர் இந்த யாத்திரையிற் கலந்துகொண்டனர்.

யாத்திரை சிறப்புடன் நிகழ்ந்து நிறைவேறியது.

இதைப் பற்றிய செய்திகளைத் தாங்கி, அடுத்த இரண்டு முல்லைக்கொடி இதழ்கள் ஒரு மலராகவெளிவரும். (ஆ-ர்)

குடிசைத் தொழிலில்
தலைமையானது
நெய்தல் தொழிலே!

PHONE 55034 TEL.ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பணமுதலியார்ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி.சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்: மதுராந்தகம் (அஞ்.)